சார்பு நீதிமன்றம், மேலூர்

OS 247/2022

| | |
|---|---|
| பெயர் | : சுப்புராமு(வா.சா.2) |
| தகப்பனார் பெயர் | :ராமானுஜம் |
| கணவர் பெயர் | : |
| வயது | :77 |
| கிராமம் | :ஒத்தக்கடை |
| வட்டம் | :மதுரை |
| தொழில் | :பால்வியாபாரம் |

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

14.08.2025

வா.சா.2 முதல் விசாரணை:

நான் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணையை பெற்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் இந்த வழக்கில் வாதி தரப்பு 2வது சாட்சி. என்னுடைய ஆதார் அட்டையின் ஒளிநகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு தொடர்பான விபரங்களை நான் கேட்டு தெரிந்து கொண்டேன். முருகேசன் மற்றும்மலைச்சாமி ஆகியோருக்கிடையே வழக்கு நடந்து வருகிறது. மலைச்சாமி தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். மலைச்சாமி, முருகேசனுக்கு 4 லட்சம் ரூபாய் 2022ம் ஆண்டு கடனாக கொடுத்தார். அதை திருப்பி கொடுக்கவில்லை என்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பணம் கொடுத்து சுமார் 2- 3 ஆண்டுகள் இருக்கும். பணம் கொடுத்த விபரம் எனக்கு தெரியும். வழக்கு மலைச்சாமி, முருகேசன் மீது எதற்காக தாக்கல் செய்திருக்கிறார் என்று தெரியும். அசலும், வட்டியும் கொடுக்கவில்லை என்பதால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 4 லட்சம் ரூபாய் தொழில் செய்வதற்காக கடனாக கொடுக்கப்பட்டது. சொத்தும் எழுதி வாங்கிகொண்டார்கள். வா.சா.ஆ.2 சாட்சியிடம் காட்டப்பட்டு அதில் உள்ள முதல் கையெழுத்து தன்னுடையது தான் என்று சாட்சி குறிப்பிடுகிறார். மேற்படி வா.சா.ஆ.2 பத்திரம் என்ன பத்திரம் என்று தெரியுமா என்றால் அக்ரிமெண்ட் என்று சொன்னார்கள் எனக்கு எதுவும் தெரியாது.

குறுக்கு விசாரணை :

பணம் கொடுக்கல் வாங்கல் செய்தது கொரானாவிற்கு முன்பா, பின்பா என்பது நினைவில்லை. மலைச்சாமி, இந்த வழக்கை முருகேசன் என்பவரிடம் இருந்து சொத்தை கிரையம் பெறுவதற்கு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டதாகவும், அதற்கு நான் தான் தரகர் என்ற முறையில் சொத்தை வாங்கிகொடுக்க செயல்பட்டதாகவும், சொத்தை கிரையம் செய்து கொடுப்பதற்கு மீதபணத்தை கொடுத்து, சொத்து கிரையத்திற்காக இந்த வழக்கை தாககல்செய்துள்ளார் என்றால் அது தவறாகும், கடனிற்காக தான் மலைச்சாமி, முருகேசனுக்கு 4 லட்சம் ரூபாய் கொடுத்தார். முதலில் 4 லட்சம் ரூபாய்க்கு 1-1/2 வட்டி என்று பேசப்பட்டது. அதன்பிறகு 2 வட்டி என்று பேசப்பட்டது. மலைச்சாமி, கிரைய ஒப்பந்தம் போட்டு வந்தார் என்றவுடன் அதைபற்றி நான் கேட்னோ என்றால்கேட்டேன். மலைச்சாமி அதற்கு முருகேசன் ஏமாற்றி விடுவார் என்று கிரைய ஒப்பந்தம் போட்டால் தான் வலுவாக இருக்கும் என்று கூறிகொண்டு வந்தார். 4 லட்சம் ரூபாய் கொடுக்கும்போது அதற்கான வட்டியை பிடித்து கொண்டு தான் மீதபணத்தை முருகேசனிடம் கொடுத்தார் என்றால் சரிதான். 14.11.2019 அன்று மலைச்சாமி என்பவர் முருகேசன் என்பவரிடம் முன்வட்டியாக ரூபாய் 16000 பெற்று கொண்டதாக எழுதி அதில் நானும் கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரிதான். சாட்சி மேற்படி ஆவணத்தை ஒப்புகொள்ளவே மேற்படி ஆவணம் பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சியிடம் வா.சா.ஆ.2 கிரைய ஒப்பந்தம் காட்டப்பட்டு, அதில் உள்ள குறிப்பு பகுதி கையெழுத்திட்டு அடிக்கப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். அதில் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தானா என்று கேட்கப்பட்டது முதலில் சாட்சி இல்லை என்று குறிப்பிட்டுவிட்டு, மீண்டும் சாட்சி தன்னுடையது என்று குறிப்பிடுகிறார். மலைசாமியிடம் இருந்து 4 லட்சம் ரூபாய் முருகேசனுக்கு வட்டிக்காக வாங்கிகொடுத்து அதற்கான

வட்டியை முருகேசன் பால் ஊற்றி செலுத்திவிடுவார் என்றால் சரிதான். மாதா மாதம் நான் வட்டிக்காசை மலைச்சாமியிடம் கொடுத்துவிடுவேன் என்றால் சரிதான். மேற்படி வட்டிக்காசை பால்பட்டுவாடா செய்து வரவு வைத்ததை ஒரு கைப்புத்தகத்தில் எழுதி வைத்து 15 நாளுக்கு ஒருமுறை பால் ஊற்றிய கணக்கை முடித்துவிடுவேன் என்றால் சரிதான். வட்டிக்காசை எடுத்தது போக மீதக்காசை முருகேசனுக்கு கொடுத்துவந்தேன். சாட்சியிடம் மேற்படி புத்தகம் காட்டப்பட்டு அதை தான் சாட்சி எழுதி வைத்ததாக ஒப்புகொள்ளவே மேற்படி ஆவணம் பி.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சுமார் 6 மாத காலம் வரை முருகேசன் வட்டிகாசு செலுத்திவந்தார் அதன்பின்னிட்டு செலுத்தவில்லை. அதன்பின்னிட்டு, முருகேசன் மலைச்சாமியிடம் பணம் பட்டுவாடா செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னர் முருகேசன் வட்டிக்கு பணம் வாங்கியதற்கு சொத்தை கிரைய ஒப்பந்தம் போட்டதாக சொல்லி வழக்கு தாக்கல் செய்திருப்பதாக ஒத்தக்கடை காவல்நிலையத்தில் புகார் தெரிவித்திருந்தார் என்றால் என் மீது கொடுத்த விபரம் தெரியும். ஒத்தக்கடை காவல்நிலையத்தில் விசாரணைக்கு நான் சென்றபோது, நான் எழுதி கொடுத்ததாக சொல்லப்பட்ட கடிதம் காட்டப்பட்டது சாட்சி அதை மறுக்கிறார். வட்டிக்கு வாங்கி கொடுத்தது உண்மை தான் என்று ஒத்தக்கடை காவல்நிலையத்தில் விசாரணையில் தெரிவித்துவிட்டேன். ஆக வாதியும், பிரதிவாதியும், வட்டிக்கு பணம் கொடுக்கல் வாங்கல் செய்து வந்தார்கள் என்றால் சரிதான்.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.08.14 18:41:32 +0530

Sub Judge

Melur